## நிர்வாகம்

1. விருப்ப ஓய்வு (VRS) _________ ஆண்டுகள் பணி நிறைவு செய்தால் அனுமதிக்கப்படும்

A) 15 ஆண்டுகள்
B) 20 ஆண்டுகள்
C) 25 ஆண்டுகள்
D) 30 ஆண்டுகள்

2. அரசு பணியாளரின் விடுப்பு குறித்து கையாளப்படும் விதி _________.

A) அடிப்படை விதிகள்
B) த.நா.போ.வி
C) த.நா.தீ.வி
D) ஓய்வூதிய விதிகள்

3. தீயணைப்பு துறையில் அதிகபட்ச ஈட்டிய விடுப்பின் இருப்பு வைப்பு நாட்கள் _________.

A) 240 நாட்கள்
B) 180 நாட்கள்
C) 300 நாட்கள்
D) 120 நாட்கள்

4. தகுதிகாண் பணி பருவம் முடிக்க எடுத்துக் கொள்ளப்படாத காலம் _________.

A) தற்காலிக பணி நீக்க காலம்
B) கட்டாயக் காத்திருப்பு
C) அனுபவிக்காத பணி ஏற்பிடைக் காலம்
D) அரசு விடுமுறைகள்

5. தீயணைப்பாளரின் பெருந்தண்டனை குறித்த நிர்வாக நடவடிக்கைக்கு மேல்முறையீட்டு அலுவலர் யார்?

A) மாவட்ட அதிகாரி
B) உதவி மாவட்ட அதிகாரி
C) துணை இயக்குநர்
D) நிலைய அதிகாரி (போக்குவரத்து)

6. கூடுதல் பொறுப்பு படி பெறத் தகுதியான காலம் யாது?

A) 39 நாட்கள்
B) 40 நாட்கள்
C) 48 நாட்கள்
D) 1 ஆண்டு

7. காணாமல் போன பணியாளர் எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்ததாக கருதப்படுவார்?

A) 5 ஆண்டுகள்
B) 7 ஆண்டுகள்
C) 3 ஆண்டுகள்
D) 2 ஆண்டுகள்

8. முழு ஓய்வூதியம் பெறுவதற்கான நிகர பணிக்காலம் எவ்வளவு?

A) 20 ஆண்டுகள்
B) 28 ஆண்டுகள்
C) 10 ஆண்டுகள்
D) 30 ஆண்டுகள்

9. ஒரு பணியாளர் காவல் துறையால் 48 மணி நேரத்திற்கு மேலாக விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தால் கீழ்கண்ட எந்த விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்?

A) 17 (a) TNCS (D&A) விதிகள்
B) 17 (b) TNCS (D&A) விதிகள்
C) 17 (c) TNCS (D&A) விதிகள்
D) 17 (e) TNCS (D&A) விதிகள்

10. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது தண்டனையாக கருதப்படாது?

A) ஊதிய குறைப்பு
B) கண்டனம்
C) பணி நீக்கம்
D) எச்சரிக்கை

11. ஒரு அரசு ஊழியர் இறந்த பிறகு எவ்வளவு காலத்திற்குள் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரி மனு சமர்ப்பிக்கப் பட வேண்டும்?

A) 3 மாதங்கள்
B) 1 ஆண்டு
C) 3 ஆண்டுகள்
D) 5 ஆண்டுகள்

12. இடை நீக்கக் காலத்தை _________ ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்கக் கூடாது

A) 2 ஆண்டுகள்

B) 3 ஆண்டுகள்

C) 1 ஆண்டு

D) இவற்றில் எதுவுமில்லை

13. கட்டாய காத்திருப்புக் காலம் பின்வருவனவற்றில் எவற்றால் முறைப்படுத்தப்படுகிறது?

A) ஈட்டா விடுப்பு

B) பணிக்கு வராமை

C) பணிக் காலம்

D) இவற்றில் எதுவுமில்லை

14. ஒரு அரசுப் பணியாளர் பிறந்த தேதியை திருத்தம் செய்ய அரசுப் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும்?

A) 3 ஆண்டுகள்

B) 5 ஆண்டுகள்

C) 10 ஆண்டுகள்

D) மேற்கண்ட எதுவுமில்லை

15. ஒரு அரசுப் பணியாளர் ஓரே நேரத்தில் தற்செயல் விடுப்பை _________ நாட்களுக்கு மிகாமல் எடுக்க வேண்டும்

A) 10 நாட்கள்

B) 12 நாட்கள்

C) 3 நாட்கள்

D) 6 நாட்கள்

16. I. துணிகர தீயணைப்பு பணி செய்த தீயணைப்பு பணியாளர்களுக்கு நற்பணி பதிவுகள் அளிக்கலாம்.

II. மத்திய அரசால் தீயணைப்பு துறையில் வீரதீரச் செயல் புரிந்த பணியாளர்களுக்கு குடியரசுத் தலைவரின் வீரதீரச் செயலுக்கான தீயணைப்பு பணி பதக்கம் வழங்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் எது/எவை சரியானது?

A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) I, II இரண்டும் சரி
D) I,II இரண்டும் தவறு

தற்காலிக அமைப்புகளில் தீ பாதுகாப்பு ஆணை எண் ________.

A) ஆணை எண் - 256
B) ஆணை எண் - 255
C) ஆணை எண் - 254
D) ஆணை எண் - 253

18. தவறான இணையை கண்டறிக:

| | | | |
|---|---|---|---|
| I | படைக்கலச் சட்டம் மற்றும் விதியின் கீழ் உரிமம் வழங்கிய இடம் ஆய்வு | a | ஆணை எண் -252 |
| II | திரைப்படக் கொட்டகை ஆய்வு | b | ஆணை எண் -253 |
| III | திரைச்சுருள் சேமிப்பிடங்கள் | c | ஆணை எண் -254 |
| IV | வெடி பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் சேமிப்பிடங்கள் | d | ஆணை எண் -250 |

A) I - a
B) II - b
C) III - c
D) IV - d

19. வாக்கியம்-I: சட்டத்திற்கு புறம்பாக குழுமிய ஆயுதம் தாங்கியிராத, மூர்க்கமில்லாத கூட்டத்தைக் கலைப்பதற்கு தீயணைக்கும் வாகனத்தை பயன்படுத்தக் கூடாது.

வாக்கியம்-II: குடிநீர் வழங்கலுக்காக தீயணைப்பு வாகனங்களைக் கோரக்கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் எது/எவை சரியானது?

A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) I, II இரண்டும் சரி
D) I,II இரண்டும் தவறு

20. தீ விபத்து அறிக்கைகள் தயாரிப்பதற்கு தீயணைப்புத் துறை நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள ஆணை எண் என்ன?

A) ஆணை எண் - 246
B) ஆணை எண் - 236
C) ஆணை எண் - 240
D) ஆணை எண் - 266

21. நிலைய அலுவலா் ஒரு ஆண்டுக்கு பண்டக சாலையை எத்தனை முறை ஆய்வு செய்ய வேண்டும்?

A) ஆண்டுக்கு ஒரு முறை
B) ஆறு மாதங்களுக்கு ஒரு முறை
C) மூன்று மாதங்களுக்கு ஒரு முறை
D) இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை

22. விளையாட்டு திடல்கள், பொருட்காட்சி திடல்கள், போட்டிப் பந்தயக் களங்கள் ஆகியவற்றில் நீர் தெளிப்பதற்காக தீயணைப்பு அலகுகளைப் பயன்படுத்துவது பற்றி எந்த ஆணை எண்ணில் தீயணைப்புத் துறை நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A) ஆணை எண் -269
B) ஆணை எண் -273
C) ஆணை எண் -274
D) ஆணை எண் -271

23. ஆயத்தப் பணியின் போது வண்டியின் பொறியை எத்தனை மணி நேரத்திற்கு ஒரு முறை முடுக்கி விட வேண்டும்?

A) ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை
B) இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை
C) மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை
D) நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை

24. தீ விபத்து குறித்த உண்மை விபரங்களை பத்திரிகைக்கு வெளியிடுவதற்கான அதிகாரத்தை அரசு யாருக்கு அளித்துள்ளது?

A) நிலைய தீயணைப்பு அதிகாரி
B) உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர்
C) மாவட்ட தீயணைப்பு அலுவலர்
D) முன்னனி தீயணைப்பாளர்

25. தீயணைப்பு நடைமுறை நூலில் முன்னனித் தீயணைப்போரின் கடமையை குறிக்கும் ஆணை எண் என்ன?

A) ஆணை எண் -142
B) ஆணை எண் -143
C) ஆணை எண் -141
D) ஆணை எண் -144

26. நடுத்தர தீ விபத்தின் இழப்பு மதிப்பீடு என்ன?

A) ரூ.10,000க்கு மேல் 50,000 வரை
B) ரூ.10,000க்கு மற்றும் அதற்கு குறைவாக
C) ரூ.5,000க்கு குறைவாக
D) ரூ.50,000க்கு மேல்

27. தீயணைப்புத்துறை நடைமுறை நூலில் தீ விபத்தின் போது காவல் துறையினரின் கடமைகள் பற்றி குறிப்பிடும் ஆணை எண் என்ன?

A) ஆணை எண் - 245
B) ஆணை எண் - 292
C) ஆணை எண் - 291
D) ஆணை எண் - 293

28. தீயணைப்புத் துறை நடைமுறை நூலில் அரசு அலுவலகங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி கூறும் இணைப்பு ________.

A) இணைப்பு XXV
B) இணைப்பு XX
C) இணைப்பு XXVIII
D) இணைப்பு XXI

29. 21 நாட்களுக்கு மிகையாக பணிக்கு வராத பணியாளர் பற்றிய ஆணை எண் ________.

A) ஆணை எண் -101
B) ஆணை எண் -92
C) ஆணை எண் -95
D) ஆணை எண் -108

30. தீயணைப்புத்துறை நடைமுறை நூலில் மாநில விளையாட்டு மற்றும் பணித் திறனாய்வு போட்டிகள் தொடர்பான ஆணை எண் எது?

A) ஆணை எண்-682
B) ஆணை எண்- 684
C) ஆணை எண்-685
D) ஆணை எண்- 683

## நிலைய அன்றாட நடைமுறை

31. பண்டகசாலையில் நிலைய அதிகாரியால் காலமுறை சரி பார்த்தல் செய்யப்படுவது ____________.

A) காலாண்டிற்கு ஒருமுறை
B) அரையாண்டிற்கு ஒருமுறை
C) ஆண்டிற்கு ஒருமுறை
D) மாதந்தோறும்

32. பொது நாட்குறிப்பு பராமரிக்கப்பட வேண்டிய கால அளவு ____________.

A) 5 ஆண்டுகள்
B) 10 ஆண்டுகள்
C) 3 ஆண்டுகள்
D) 2 ஆண்டுகள்

33. அனைத்து ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் பொது விடுப்பு நாட்களில் நிலைய அதிகாரி அவர்களின் தீயணைப்பு நிலையத்திற்கு எத்தனை முறை பார்வையிட வேண்டும்?

A) பகலில் குறைந்தது இரண்டு முறை
B) பகலில் குறைந்தது ஒரு முறை
C) பகலில் குறைந்தது மூன்று முறை
D) மேற்கண்ட எதுவுமில்லை

34. நடமாடும் நீா் தொட்டி அலகில் எத்தனை நீளமுள்ள நீா் விடு குழாய்களை வைத்திருக்க வேண்டும்?

A) 15 மீட்டர் நீளமுள்ள 3 நீா் விடு குழாய்கள்
B) 15 மீட்டர் நீளமுள்ள 4 நீா் விடு குழாய்கள்
C) 15 மீட்டர் நீளமுள்ள 5 நீா் விடு குழாய்கள்
D) 15 மீட்டர் நீளமுள்ள 6 நீா் விடு குழாய்கள்

35. வாக்கியம்- I: தீயணைப்பு நிலைய அலுவலா் நாள் தோறும் வெளிச் செல்லுதல் பயிற்சி நடத்த வேண்டும்

வாக்கியம்- II: ஒரு வாரத்தில் மூன்று முறை இரவில் வெளிச் செல்லுதல் பயிற்சி நடத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் எது/எவை சரியானது?

A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) I, II இரண்டும் சரி
D) I,II இரண்டும் தவறு

36. பின்வருவனவற்றைப் பொருத்துக

I. நீர் விடு குழாய் விவரப் பதிவேடு — A) படிவம் எண் 25-ன்படி பராமரிக்கப்பட வேண்டும்
II. அலுவல் முறைப் பட்டி — B) படிவம் எண் 27-ன்படி பராமரிக்கப்பட வேண்டும்
III. காவல் முறை மாற்றுப் பதிவேடு — C) படிவம் எண் 24-ன்படி பராமரிக்கப்பட வேண்டும்
IV. பெயர் பட்டியல் — D) படிவம் எண் 34-ன்படி பராமரிக்கப்பட வேண்டும்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| A) | a | b | c | d |
| B) | c | d | b | a |
| C) | b | a | d | c |
| D) | d | c | a | b |

37. தவறான இணையைக் கண்டறிக :

A. வெற்றிடமானி — எதிர்மறை அழுத்தத்தை அளப்பதற்கு மட்டும்
B. டேக்கோ மீட்டர் — நீர் விடு குழாயின் அழுத்தத்தை அளப்பதற்கு
C. அழுத்தமானி — நேர்மறை அழுத்தத்தை அளப்பதற்கு மட்டும்
D. கூட்டுமானி — நேர்மறை மற்றும் எதிர்மறை அழுத்தத்தை அளப்பதற்கு

38. தீயணைப்பு நிலைய அலுவலர் தம் எல்லைக்குட்பட்ட தொழிற்சாலைகளை குறைந்தது எத்தனை காலத்திற்கு ஒரு முறையாவது ஆய்வு செய்ய வேண்டும்?

A) வருடத்திற்கு ஒரு முறை
B) ஆறு மாதங்களுக்கு ஒரு முறை
C) இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை
D) நான்கு மாதங்களுக்கு ஒரு முறை

39. தீ விபத்து அழைப்பு படிவத்தின் எண் என்ன?

A) படிவம் எண் 37
B) படிவம் எண் 38
C) படிவம் எண் 39
D) படிவம் எண் 41

40. ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை என்ன?

A) 18
B) 16
C) 17
D) 19

## விதிகள் மற்றும் விதிமுறைகள்

41. களப்பணியாளர்களின் தகுதிக்காண் பருவத்தின் கால அளவு எவ்வளவு?

A) 2 ஆண்டுகள்
B) 3 ஆண்டுகள்
C) 4 ஆண்டுகள்
D) 5 ஆண்டுகள்

42. மந்தண அறிக்கை அனுப்ப தேவையில்லாத பதவி__________.

A) முன்னணி தீயணைப்போர்
B) எந்திர கம்மியர் ஓட்டி
C) தீயணைப்போர்
D) நிலைய அதிகாரி

43. அருகாமையில் உள்ள மாநிலத்திலிருந்து தீ விபத்து அழைப்புகள் பெறப்பட்டால் தீ விபத்து சேவைக்கு ஆன மொத்தச் செலவுத் தொகை __________ யிடம் பெறப்பட வேண்டும்

A) அழைத்த நபரிடமிருந்து பெறப்பட வேண்டும்
B) சம்பந்தப்பட்ட மாநில அரசிடமிருந்து பெற வேண்டும்
C) எவரிடமிருந்து பெறப்படக் கூடாது
D) (A & B)

44. தீயணைப்பு துறை அதிகாரிகள் தொழிற்சாலைகளை எப்பொழுது ஆய்வு செய்ய வேண்டும்?

A) எந்த நேரத்திலும்
B) வேலை நேரத்தில்
C) வேலையில்லாத நேரத்தில்
D) விடுமுறை நாட்களில்

45. தீயணைப்பு அழைப்புக்கு செல்லும் வழியில் தீயணைப்பு வாகனம் விபத்துக்குட்பட்டால் பின்பற்ற வேண்டிய சரியான நடைமுறை என்ன?

A) தீயணைப்பு அழைப்புக்கு தொடர்ந்து செல்ல வேண்டும்.
B) தீயணைப்பு அழைப்புக்கு செல்லக் கூடாது.
C) காவல் துறைக்கு தகவல் தெரிவித்து
D) விபத்துக்குண்டான இடத்தில் ஒரு அலுவலரை நிருத்தி விட்டு வாகனம் தீயணைப்பு அழைப்புக்கு தொடர்ந்து செல்ல வேண்டும்.

46. முதலமைச்சரின் பதக்கம் பெற, சார் நிலைப் பணியாளர்களின் குறைந்த பட்ச பணிக் காலம் என்ன?

A) 5 ஆண்டுக்கு குறையாமல்
B) 7 ஆண்டுக்கு குறையாமல்
C) 8 ஆண்டுக்கு குறையாமல்
D) 10 ஆண்டுக்கு குறையாமல்

47. தீ பாதுகாப்பு கண்ணோட்டத்தில் தரை மட்டத்திலிருந்து பந்தலின் கூறை மற்றும் பிற தற்காலிக அமைப்பின் குறைந்த பட்ச உயரம் என்ன?

A) 1.6 மீட்டர்
B) 3.6 மீட்டர்
C) 2.6 மீட்டர்
D) 5 மீட்டர்

48. நகராட்சி நீர் விநியோக நோக்கத்திற்கு தீயணைப்பு சாதனங்களை கேட்கும் பொழுது என்ன செய்ய வேண்டும்?

A) கண்டிப்பாக வழங்க வேண்டும்.
B) சரியான கட்டணம் பெற்ற பிறகு வழங்கலாம்.
C) கண்டிப்பாக வழங்க கூடாது.
D) A மற்றும் B சரி

49. கரும்புள்ளி தண்டனை __________ வழங்கலாம்

A) நிலைய அதிகாரி
B) முதன்மை தீயணைப்பாளர் மற்றும் அதற்கு குறைவான பதவி
C) மாவட்ட உதவி அதிகாரி
D) மேற்கண்ட அனைவருக்கும்

50. நிலைய அதிகாரி பதவி எந்த வகையில் சேர்க்கப்பட்டுள்ளது?

A) அமைச்சு பணியாளர்
B) சார்நிலைப் பணிகள்
C) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்
D) பிரிவு-III பணிகள்

## பொது வினாக்கள்

51. தமிழ்நாடு தீயணைப்புத் துறை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு?

A) 2001
B) 2002
C) 2003
D) 2004

52. 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய தீயணைப்பு நாளின் கருப்பொருள் என்ன?

A) தீ பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வு தேசிய உள்கட்டமைப்பின் வளர்ச்சியாகும்
B) தீ தடுப்பு சாதனங்கள் முறையாக பராமரிப்பது தீ விபத்துகளை தடுப்பதற்கு வழியாகும்
C) தீ பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வு மாநில உள்கட்டமைப்பின் வளர்ச்சியாகும்
D) மேற்காணும் எதுமில்லை

53. கீழ்கண்டவற்றில் எது காட்டுத் தீயை அணைக்க சிறந்த முறையாகும்?

A) விபத்து இடத்தில் நீர் தாங்கி வண்டியை உபயோகப்படுத்துவதன் மூலமாக
B) நீர் தொட்டியுடன் இணைக்கப்பட்ட நீர் தும்பியின் மூலமாக
C) எதிர் தீயை உருவாக்குவதன் மூலமாக
D) பெரும் அளவிலான ஆக்சிஜனை கட்டுப்படுத்துவதன் மூலமாக

54. பெட்ரோலின் பற்ற வைப்பு வெப்பநிலை என்ன?

A) 46° C
B) 54° C
C) 64° C
D) 220° C

55. தீயை அணைக்கும் போது தீயின் __________ பகுதியை நோக்கி தீயணைப்பானை இயக்க வேண்டும்.

A) மையத்தில்
B) அடிவாரத்தில்
C) மேலே
D) பக்கத்தில்

56. தீ முக்கோணத்தின் கூறுகள் :

A) வெப்பம், ஆக்ஸிஜன், எரிபொருள்
B) வெப்பம், CO2, எரிபொருள்
C) ஆக்ஸிஜன், மரம், CO2
D) வெப்பம், ஆக்ஸிஜன், CO2

57. நீர் வகை தீயணைப்பானை __________ மட்டும் பயன்படுத்த வேண்டும்.

A) திரவ எரிபொருள் தீ
B) வாயு சம்பந்தப்பட்ட தீ
C) திட எரிபொருள் தீ
D) மின்சாரம் சம்பந்தப்பட்ட தீ

58. Fire Assembly Point என்றால் என்ன?

A) தீயணைப்பான்கள் வைக்கப்படும் இடம்
B) வருகைப் பட்டியல் எடுக்கும் பாதுகாப்பான இடம்
C) எந்தவொரு பாதுகாப்பான இடம்
D) தீயணைப்பு நிலையத்தின் முன் வாயில்

59. தீயை அணைக்கும் கருவியைப் பயன்படுத்துவதில் PASS என்பது __________.

A) Pull, Aim, Squeeze, Sweep
B) Plunge, Aim, Squeeze, Sweep
C) Pull, Aim, Shoot, Sweep
D) Plunge, Address, Shoot, Sweep

60. CPR என்பதன் சுருக்கம் எதைக் குறிக்கிறது?

A) Cardiovascular Preventive Rescue
B) Cardiopulmonary Resuscitation
C) Cardiovascular Pulmonary Rehabilitation
D) Cardiopulmonary Remedy

61. தேசிய தீயணைப்பு பயிற்சி கல்லூரி எங்கு அமைந்துள்ளது?

A) புதுதில்லி
B) மும்பை
C) நாக்பூர்
D) கொல்கத்தா

62. தீ காயத்திற்கு என்ன சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது?

A) தீக்காயத்தில் ஐஸ் தடவவும்
B) தீக்காயத்திற்கு களிம்பு தடவவும்
C) தீக்காயத்தை சுத்தமான, உலர்ந்த துணியால் மூட வேண்டும்.
D) மேலே உள்ள அனைத்தும்

63. பாம்பு கடிக்கு என்ன சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது?

A) விஷத்தை அகற்ற காயமடைந்த இடத்தை மேலும் திறத்தல்.
B) கடித்த இடத்தில் ஒரு டூர்னிக்கெட்டை பயன்படுத்துதல்
C) பாதிக்கப்பட்ட மூட்டுகளை அசையாமல் வைத்திருங்கள்
D) மேலே உள்ள அனைத்தும்

64. பின்வருவனவற்றில் எதை ஒருபோதும் மின்சார தீயில் பயன்படுத்தக் கூடாது?

A) தண்ணீர்
B) கார்பன்டை ஆக்சைடு அணைப்பான்
C) உலர் தூள் அணைப்பான்
D) நுரை அணைப்பான்

65. நெருப்புப் போர்வையின் (Fire Blanket) முதன்மை நோக்கம் என்ன?

A) தீயை அணைத்து அதன் ஆக்ஸிஜன் விநியோகத்தை துண்டிக்க
B) வெப்பம் மற்றும் தீப்பிழம்புகளில் இருந்து தீயணைப்பு வீரர்களை பாதுகாக்க
C) புகை சுவாசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்ஸிஜனை வழங்குதல்
D) மேற்கண்ட எதுவுமில்லை

66. புகை சூழ்ந்த அறையிலிருந்து வெறியேற எளிமையான வழி _____________.

A) ஓடுதல்
B) ஊர்ந்து செல்லுதல்
C) நடத்தல்
D) அசையாதிருத்தல்

67. கதிரியக்க அபாயத்தைக் குறிக்கும் நிறம் என்ன?

A) சிகப்பு
B) ஆரஞ்சு
C) பச்சை
D) ஊதா

68. எரியக்கூடிய எண்ணெய் போன்ற திரவத் தீய்க்கு தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது ஏன்?

A) எரியக்கூடிய திரவத்தின் அடர்த்தி தண்ணீரின் அடர்த்தியை விடக் குறைவு
B) எரியக்கூடிய திரவத்தின் அடர்த்தி தண்ணீரின் அடத்தியை விட அதிகம்
C) எரியக்கூடிய திரவத்தின் அடர்த்தியும் தண்ணீரின் அடர்த்தியும் சமம்
D) இவற்றில் எதுவுமில்லை

69. LPG என்பது எந்தெந்த வாயுக்களின் கலவை?

A) 50% பியூட்டேன், 50% புரொப்பேன்
B) 60% புரொப்பேன், 40% பியூட்டேன்
C) 55% பியூட்டேன், 45% புரொப்பேன்
D) 60% பியூட்டேன், 40% புரொப்பேன்

70. வாக்கியம்- I: கதிரியக்கத்தின் போது ஆல்பா, பீட்டா மற்றும் காமா துகள்கள் வெளியிடப்படுகிறது
வாக்கியம்- II: காமா துகள்கள் ஆல்பா, பீட்டா துகள்களை விட குறைந்த ஊடுருவும் திறன் கொண்டது.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் எது/எவை சரியானது?

A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) I, II இரண்டும் சரி
D) I,II இரண்டும் தவறு

71. “சர்வதேச பேரிடர் குறைப்பு நாள்” என்று அனுசரிக்கப்படுகிறது?

A) அக்டோபர் - 13
B) டிசம்பர் - 13
C) நவம்பர் -13
D) ஜனவரி - 13

72. அருகிலுள்ள கட்டிடத்தில் ஏற்படும் தீ விபத்தில் இருந்து பாதுகாக்க கட்டிடத்தின் மேற் கூறையிலும், ஜன்னல்களிலும் பொருத்தக் கூடிய அமைப்பின் பெயர் __________.

A) ட்ரன்ஜா்ஸ்
B) ஸ்பிரிங்களர்ஸ்
C) ஹோஸ் ரீல் ஹோஸ்
D) டவுன் காமா்

73. ஒரு தீயணைப்பு அலுவலா் என்ற முறையில் மின்மாற்றிகளில் ஏற்படும் தீ விபத்தை தடுக்க எந்த வகையான தீத்தடுப்பு அமைப்பை பரிந்துரை செய்வீா்?

A) நீா் தெளிப்பான்கள்
B) நீா் வாளி அமைப்புகள்
C) நிலையான CO2 அமைப்புகள்
D) நிலை நீா்க் குழாய் அமைப்புகள்

74. ஆல்கஹால் போன்ற திரவங்களில் ஏற்படும் தீ விபத்துகளுக்கு எந்த வகையான தீயணைக்கும் கருவி பயன்படுத்தப்பட வேண்டும்?

A) தண்ணீா் CO2 வகை
B) சோடா ஆசிட் வகை
C) ஆல்கஹால ரெசிஸ்டென்ட் நுரை வகை
D) இவற்றில் எதுவுமில்லை

75 டிசிபி (DCP)ன் வேதி வாய்ப்பாடு __________.

A) CaHPO3
B) CaHPO2
C) CaHPO
D) CaHPO4

76. தீயணைப்பான்களின் இந்திய தரம் (ஐ.எஸ்) எண் __________.

A) ஐ.எஸ்: 2010 : 2190
B) ஐ.எஸ்: 2190 : 2010
C) ஐ.எஸ்: 1990 : 1996
D) ஐ.எஸ்: 2010 : 2022

77. பணியின் போது வீர மரணம் அடையும் பணியாளர்களின் வாரிசுதாரா்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை எவ்வளவு?

A) பத்து லட்சம்
B) பதினைந்து லட்சம்
C) இருபது லட்சம்
D) இருபத்தி ஐந்து லட்சம்

78. நீா்தாங்கி வண்டி - Type “B” வகையின் தண்ணீா் தொட்டியின் கொள்ளவு என்ன?

A) 500 காலன்
B) 750 காலன்
C) 1000 காலன்
D) 1500 காலன்

79. தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் பயன்படுத்தப்படும் ஸ்கைலிப்ட் ஏணியின் அதிக பட்ச உயரம் என்ன?

A) 52 மீட்டர்
B) 45 மீட்டர்
C) 104 மீட்டர்
D) 110 மீட்டர்

80.
I. “ஜல்லிக்கட்டு” நிகழ்வின் போது நிலைய அதிகாரி அருகிலுள்ள திறந்த வெளி கிணறுகளை ஆய்வு செய்து மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

II. “ஜல்லிக்கட்டு” நிகழ்வில் காளைகளை மீட்கும் பொழுது அதன் கண்களை கட்டி அதன் உரிமையாளா் உடன் இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தில் எது/எவை சரியானது?

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II இரண்டும் சரி

D) I,II இரண்டும் தவறு

# விடைகள்

| வி.எண் | விடை | வி.எண் | விடை | வி.எண் | விடை | வி.எண் | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 21 | C | 41 | A | 61 | C |
| 2 | A | 22 | A | 42 | C | 62 | C |
| 3 | A | 23 | B | 43 | D | 63 | C |
| 4 | A | 24 | C | 44 | B | 64 | A |
| 5 | C | 25 | D | 45 | D | 65 | A |
| 6 | A | 26 | A | 46 | D | 66 | B |
| 7 | B | 27 | A | 47 | B | 67 | D |
| 8 | D | 28 | C | 48 | C | 68 | A |
| 9 | D | 29 | C | 49 | D | 69 | B |
| 10 | D | 30 | A | 50 | B | 70 | A |
| 11 | C | 31 | A | 51 | A | 71 | A |
| 12 | C | 32 | B | 52 | A | 72 | A |
| 13 | C | 33 | B | 53 | C | 73 | C |
| 14 | B | 34 | B | 54 | D | 74 | C |
| 15 | A | 35 | A | 55 | B | 75 | D |
| 16 | C | 36 | D | 56 | A | 76 | B |
| 17 | A | 37 | B | 57 | C | 77 | B |
| 18 | D | 38 | A | 58 | B | 78 | C |
| 19 | C | 39 | A | 59 | A | 79 | C |
| 20 | C | 40 | C | 60 | B | 80 | A |